**Regional Bulletin / Puducherry / Tamil /18.10/ 28.01.2025 / Script**

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**நாள் 28.01.2025 செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

***தலைப்புச் செய்திகள்***

ஒடிசா மாநிலம் விரைவிலேயே, **எவரும் எதிர்பாராத வளர்ச்சியின் சின்ன**மாக மேம்படும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில், **38ஆவது தேசிய விளையாட்டுப் போட்டி**களை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை தொடக்கி வைக்கிறார்.

மத்திய வெளியுறவு அமைச்சகம் இன்று, புதுடெல்லியில் உள்ள இலங்கை அரசின் பொறுப்புத் தூதரை நேரில் அழைத்து, இந்திய மீனவர்கள் மீதான **துப்பாக்கிச் சூடு** குறித்து, **இந்தியாவின் எதிர்ப்பை** பதிவு செய்துள்ளது.

புதுச்சேரியில் அனைவருக்கும் சிறப்பான மருத்துவ வசதிகள் கிடைப்பதை, மத்திய அரசின் மருத்துவக் குழுவே, ஆய்வு செய்து ஒப்புக் கொண்டுள்ளதாக, முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

**மோடி ஒடிசா 1 (18 )**

புதிய வாய்ப்புகள் மற்றும் நம்பிக்கைகளின் களமே ஒடிசா மாநிலம் என்றும், ஒடிசா விரைவிலேயே, எவரும் எதிர்பாராத வளர்ச்சியின் சின்னமாக மேம்படும் என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். ஒடிசாவிற்கு வரும் முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் அதிபர்களுக்கு மோடியின் உத்தரவாதமாகவே, இந்த வாக்குறுதியை தாம் வழங்குவதாக, அவர் இன்று புவனேஷ்வரில், செழிப்பான ஒடிசா-ஒடிசாவில் தயாரிப்போம் மாநாட்டை

தொடக்கி வைத்துப் பேசுகையில் கூறினார். நாட்டின் பிரதமராக பதவி ஏற்ற பின்னர், இதுவரை 30 முறை தாம் ஒடிசாவிற்கு வந்திருப்பதாகவும், ஒடிசாவிற்கு தாம் அதிக முக்கியத்துவம் அளித்து வருவதற்கு இதுவே சான்றாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டிலேயே மிக வேகமாக வளரும் மாநிலங்களில் ஒன்றாக, ஒடிசாவை மேம்படுத்தும் திறன், ஒடிசா மக்களுக்கு இருப்பதாகவும், உலகின் 3ஆவது பெரிய பொருளாதாரமாக இந்தியாவை மேம்படுத்துவதில், ஒடிசாவின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். தொழில் அதிபர்கள் மற்றும் முதலீட்டாளர்கள், ஒடிசா மாநிலத்தின் சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் துறையிலும், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மற்றும் புதுமையாக்க முயற்சிகளிலும், அதிக முதலீடு செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

**மோடி ஒடிசா 2 (9 )**

ஒடிசா முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி, மத்திய அமைச்சர்கள் திரு. தர்மேந்திர பிரதான், திரு.அஸ்வினி வைஷ்ணவ் உள்ளிட்டோர், மாநாட்டின் தொடக்க விழாவில் கலந்து கொண்டனர்.

இந்தியா மற்றும் 20க்கும் மேற்பட்ட வெளிநாடுகளில் இருந்து சுமார் 7 ஆயிரத்து 500 பிரதிநிதிகள், இந்த 2 நாள் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். ஒடிசா மாநிலத்தை வலுவான-துடிப்பான பொருளாதாரமாக மாற்றும் நோக்கத்திலான இம்மாபெரும் வர்த்தக மாநாட்டில், நூற்றுக்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்றும், இதனால் சுமார் மூன்றரை லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**மோடி விளையாட்டு (14)**

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில், 38ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளைத் தொடக்கி வைக்கிறார். ராஜீவ் காந்தி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும் தொடக்க விழாவில், மத்திய அமைச்சர்களும், இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் மற்றும் விளையாட்டு வீரர்கள் பலரும் பங்கேற்கிறார்கள். உத்தராகண்ட் மாநிலத்தின் நாட்டுப்புற கலைச் சிறப்பும், நவீன தொழில்நுட்பங்களும் கலந்த வண்ணமயமான கலாச்சார நிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெறுகின்றன.

38ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகள், இன்று முதல் பிப்ரவரி 14ஆம் தேதி வரை, உத்தராகண்ட் மாநிலத்தின் 11 நகரங்களில் நடைபெறுகின்றன. 35 விளையாட்டுப் பிரிவுகளில், மொத்தம் 48 போட்டிகள் இதில் இடம் பெறும். 28 மாநிலங்கள் மற்றும் 8 யூனியன் பிரதேசங்களில் இருந்து சுமார் 10 ஆயிரம் விளையாட்டு வீராங்கனைகள், போட்டிகளில் பங்கேற்கிறார்கள்.

**காரைக்கால் மீனவர் 1 (9)**

காரைக்கால் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற படகு ஒன்றின் மீது, இலங்கை கடற்படையினர் நேற்று இரவு நடுக்கடலில் துப்பாக்கிச் சூடு நடத்தி, 6 காரைக்கால் மீனவர்கள் மற்றும் 7 தமிழக மீனவர்களை கைது செய்து, படகையும் பறித்துச் சென்றது குறித்து, மத்திய வெளியுறவு அமைச்சகம் இன்று, புதுடெல்லியில் உள்ள இலங்கை அரசின் பொறுப்புத் தூதரை நேரில் அழைத்து, இந்தியாவின் வலுவான எதிர்ப்பை பதிவு செய்தது. கொழும்பில் உள்ள இந்தியத் தூதரும் இது குறித்து இலங்கை அரசிடம் பேசி இருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. மத்திய அரசின் நடவடிக்கைகள் குறித்து மேலும் சில தகவல்கள் …

**(…வாய்ஸ்…)**

**காரைக்கால் மீனவர் 2 (14)**

**(…வாய்ஸ்…)**

இலங்கை கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டின் போது காயமடைந்து, தற்போது யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள 2 இந்திய மீனவர்களை, இந்திய தூதரக அதிகாரிகள் நேரில் சென்று பார்த்து, உடல் நலம் குறித்து கேட்டறிந்தனர். பாதிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு, இயன்ற எல்லா உதவிகளையும் தூதரக அதிகாரிகள் வழங்கி வருகின்றனர்.

மீனவர் தொடர்பான பிரச்சனைகளை, வாழ்வாதாரம் பற்றிய அவர்களின் கவலைகளை கருத்தில் கொண்டு, கருணை மற்றும் மனிதாபிமான அடிப்படையில் அணுக வேண்டியதன் அவசியத்தை, இந்தியா எப்போதுமே வலியுறுத்தி வருவதாகவும், இதில் எந்த ஒரு சூழலிலும், பலப் பிரயோகம்

ஏற்கத்தக்கது அல்ல என்றும் வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது. இது தொடர்பாக, இரு அரசுகளுக்கும் இடையே ஏற்கனவே உள்ள உடன்பாடுகளை முழுமையாக பின்பற்றுதல் அவசியம் என்றும் அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

**காரைக்கால் மீனவர் 3 (9)**

முன்னதாக, சம்பவம் குறித்து தகவல் கிடைத்தவுடன், புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி, மத்திய வெளியுறவு அமைச்சருக்கு கடிதம் எழுதி, இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 13 மீனவர்களை மீட்க முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கக் கோரினார். மீன்வளத் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன் புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், மீன் வளம் என்பது பொதுவானது என்றும், இதில் இலங்கை கடற்படையினர் மனிதாபிமானம் இன்றி நடந்து கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது என்றும் கூறினார். புரிதலும் விட்டுக் கொடுப்பதுமே, பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**செவிலியர் கல்லூரி (10)**

கதிர்காமம் இந்திராகாந்தி அரசு மருத்துவக் கல்லூரியின் செவிலியர் பயிற்சிக் கல்லூரியில், புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட **இரண்டாண்டு செவிலியர் பயிற்சி** மாணவர்கள், ஒளி விளக்கேற்றி உறுதிமொழி ஏற்கும் விழா இன்று நடைபெற்றது. முதலமைச்சர் திரு. ரங்கசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ்.பி. ரமேஷ், மருத்துவக் கல்லூரி இயக்குநர் டாக்டர் உதயசங்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் முதலமைச்சர் பேசுகையில், புதுச்சேரியில் அனைவருக்கும் சிறப்பான மருத்துவ வசதிகள் கிடைப்பதை, மத்திய அரசின் மருத்துவக் குழுவே, ஆய்வு செய்து ஒப்புக் கொண்டுள்ளதாக கூறினார். முதலமைச்சர் மேலும் கூறுகையில் …

(… வாய்ஸ்…)

## வீடு ஒதுக்கீடு (8 )

புதுச்சேரியில் உருளையன்பேட்டை தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் சாலையோரம் வசிக்கும் மக்கள் விடுத்த கோரிக்கையின்படி இத்தகைய 14 குடும்பங்களுக்கு, லாம்பர்ட் சரவணன் நகரில் தொகுப்பு வீடு ஒதுக்கித் தருவதற்கான முன்னுரிமை அட்டைகளை, இன்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமி வழங்கினார். சட்டப்பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில், நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், குடிமைப்பொருள் வழங்கு துறை அமைச்சர் திரு. பிஆர்என். திருமுருகன், சட்டமன்ற உறுப்பினர் திரு.நேரு என்கிற குப்புசாமி மற்றும் குடிசைமாற்று வாரிய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## புதுச்சேரி ஆலோசனை (8)

புதுச்சேரியில், துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தலைமையிலான, பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனைக் கூட்டம், தலைமைச் செயலகத்தில் உள்ள மாநாட்டுக் கூடத்தில் இன்று மாலை நடைபெறுகிறது. முதலமைச்சர் திரு. ரங்கசாமி, மாநில அமைச்சர்கள், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், தலைமைச் செயலர், அனைத்து துறைகளுக்கான அரசு செயலர்கள், துறை தலைவர்கள், மற்றும் மாநில திட்டக்குழுவின் அலுவல் சாரா உறுப்பினர்களும், இக்கூட்டத்தில் பங்கேற்கிறார்கள்.

## பேரணி (11)

அரியாங்குப்பத்தில் வட்டார வளர்ச்சி அலுவலகம் சார்பில் இன்று நடைபெற்ற, பாலியல் வன்முறைக்கு எதிரான 3ஆம் கட்ட விழிப்புணர்வு பிரச்சாரப் பேரணியை, சட்டப்பேரவைத் தலைவர் திரு.ஆர் செல்வம், துணை சபாநாயகர் திரு. ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர் திரு. பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி ஆகியோர் கொடியசைத்து தொடக்கி வைத்தனர். அரியாங்குப்பம் மாதா கோயில் அருகில் இருந்து தொடங்கிய இப்பேரணி, முக்கிய சாலைகள் வழியாகச் சென்று, விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்ற தனியார் திருமண மண்டபத்தில் முடிவடைந்தது. மகளிர் கூட்டமைப்பு, மற்றும் சுயஉதவிக் குழு உறுப்பினர்களும், திருநங்கைகள் பலரும் இப்பேரணியில் கலந்து கொண்டனர்.

**கும்பமேளா - 1(11)**

பிரயாக்ராஜில் நடைபெறும் மகா கும்பமேளாவில், மௌனி அமாவாசை தினமான நாளை, 8 முதல் 10 கோடி பக்தர்கள், திரிவேணி சங்கமத்தில் புனித நீராடுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதை ஒட்டி, உத்தரபிரதேஷ் அரசு, கும்பமேளா பகுதியில், பாதுகாப்பு ஏற்பாடுகளை கணிசமாக அதிகரித்துள்ளது. 7 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளின் ஒரு பகுதியாக, 50 ஆயிரம் போலீசார் மற்றும் இணை ராணுவப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். செயற்கை நுண்ணறிவுக் கேமராக்கள் உட்பட சுமார் 3 ஆயிரம் கண்காணிப்பு கேமராக்கள், விழாப் பகுதியில் நிறுவப் பட்டுள்ளதாகவும், திரிவேணி சங்கமத்தில் முதல் முறையாக நீர் மூழ்கி ட்ரோன்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப் படுவதாகவும், மாநில காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**கும்பமேளா – 2 (7)**

இதற்கிடையே, மௌனி அமாவாசை தினத்தை ஒட்டி, பிரயாக்ராஜ் நகருக்கு, மேலும் 60சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என ரயில்வே துறை அறிவித்துள்ளது. இதையும், ஏற்கனவே இயக்கப்படும் சிறப்பு ரயில்களையும் சேர்த்து, சிறப்பு ரயில்களின் மொத்த எண்ணிக்கை 190ஆக அதிகரிக்கும் என்று ரயில்வே வாரியத்தின் தலைவர் திரு. சதீஷ்குமார் தெரிவித்துள்ளார். பிரயாக்ராஜில் இருந்து, 4 நிமிடத்திற்கு ஒரு ரயில் பயணிகளுக்கு கிடைக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

**கிரிக்கெட் (10)**

19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான, **ஐசிசி மகளிர்** 20 ஓவர் **உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டித்** தொடரில், இந்தியா-ஸ்காட்லாந்து அணிகளுக்கு இடையே, கோலாலம்பூரில் இன்று நடைபெற்ற போட்டியில், இந்திய அணி, 150 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்திய அணியால் நிர்ணயிக்கப்பட்ட 209 ரன் என்னும் வெற்றி இலக்கை நோக்கி 2ஆவதாக ஆடிய ஸ்காட்லாந்து அணி, 14 ஓவரில், 58 ரன்னுக்கு ஆட்டம் இழந்து, தோல்வியடைந்தது.

இதற்கிடையே ஆடவர் கிரிக்கெட்டில், இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது 20 ஓவர் சர்வதேச கிரிக்கெட் போட்டி ராஜ்கோட்டில் இன்று மாலை நடைபெறவுள்ளது.

**லட்டு திருவிழா (7)**

உத்தரபிரதேஷ் மாநிலம், பாக்பட்-டில் இன்று பகவான் ஆதிநாதர் லட்டு திருவிழாவின் போது, கூட்டம் தாங்காமல் விழா மேடை சரிந்ததால் ஏற்பட்ட விபத்தில், குறைந்தது 5 பேர் உயிரிழந்தனர். சுமார் 40 பேர் காயமடைந்து, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மீட்பு பணிகளை துரிதப்படுத்தவும், காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை கிடைப்பதை உறுதிப்படுத்தவும், முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

**அணிவகுப்பு (8 )**

புதுடெல்லியில், குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்ற ராணுவப் படைப் பிரிவகள் பாசறை திரும்பும் விழா, விஜய் சௌக்கில் நாளை நடைபெறவுள்ளது. குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணை தலைவர் திரு. ஜகதீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், மற்றும் மத்திய அமைச்சர்கள் பலரும் இவ்விழாவில் பங்கேற்க உள்ளனர். இப்படைகள் மற்றும் இணை ராணுவ படைகளைச் சேர்ந்த 30 பேண்டு வாத்தியக் குழுக்களின் இசை நிகழ்ச்சி இவ்விழாவில் முக்கியமாக இடம்பெற உள்ளது.

**சாலை விபத்து (18)**

2024ஆம் ஆண்டில் நாடு முழுவதும் நிகழ்ந்த சுமார் 5 லட்சம் சாலை விபத்துகளில், 1 லட்சத்து 80 ஆயிரம் பேர் உயிரிழந்ததாக, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார். இன்று புதுடெல்லியில், **ஊரக வளர்ச்சி மற்றும் தொழில் நுட்ப மையத்தின் அபய் திட்டம்** தொடர்பான நிகழ்ச்சியின் நிறைவு விழாவில் உரையாற்றிய அவர், சாலை விபத்துகளால் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், ஆண்டுதோறும் 3 சதவிகித இழப்பு ஏற்படுவதாகக் கூறினார். நாட்டின் ஏற்றுமதியை அதிகரிக்க, சரக்கு போக்குவரத்துச் செலவைக் குறைக்க வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் வலியுறுத்தினார். சரக்கு போக்குவரத்து செலவைக் குறைப்பதில், லாரி ஓட்டுநர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும்

நடவடிக்கைகளின் பங்கு முக்கியமானது என்றும், அந்த வகையில் லாரி ஓட்டுநர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கான **அபய்** முன்னோடித் திட்டத்தின் வெற்றி பாராட்டத்தக்கது என்றும் அவர் குறிப்பிட்டார். **அபய்** திட்டத்தின் கீழ் கடந்த ஓராண்டில், 6 மாநிலங்கள் மற்றும் 15 நகரங்களைச் சேர்ந்த சுமார் 50ஆயிரம் லாரி ஓட்டுநர்களின் வாழ்வில் முக்கிய நேர்மறைத் தாக்கங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

ஒடிசா மாநிலம் விரைவிலேயே, **எவரும் எதிர்பாராத வளர்ச்சியின் சின்ன**மாக மேம்படும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில், **38ஆவது தேசிய விளையாட்டுப் போட்டி**களை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை தொடக்கி வைக்கிறார்.

மத்திய வெளியுறவு அமைச்சகம் இன்று, புதுடெல்லியில் உள்ள இலங்கை அரசின் பொறுப்புத் தூதரை நேரில் அழைத்து, இந்திய மீனவர்கள் மீதான **துப்பாக்கிச் சூடு** குறித்து, **இந்தியாவின் எதிர்ப்பை** பதிவு செய்துள்ளது.

புதுச்சேரியில் அனைவருக்கும் சிறப்பான மருத்துவ வசதிகள் கிடைப்பதை, மத்திய அரசின் மருத்துவக் குழுவே, ஆய்வு செய்து ஒப்புக் கொண்டுள்ளதாக, முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.